வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன
பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை
உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

★ எவர்சில்வர்
★ விளையாட்டுப்
பொருள்கள்
★ பிளாஸ்டிக்
பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 02 சனிக்கிழமை (17 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 21

# தமிழகத்தில் 5 ஆண்டுகளாக காவலிலுள்ள ஈழத்தமிழரை திருப்பி அனுப்ப வலியுறுத்து

## மனித உரிமைக் குழுவிடம் மனு

சென்னை, டிசம்பர் 17

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறப்பட்டு, தமிழகப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடா சட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளாக விசாரணைகள் எதுவும் இன்றி தமிழக முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ள 58 பேரை விடுதலை செய்து இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு தடா எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த தமிழ்நாடு தேசிய இயக்கத் தலைவர் பி. நெடுமாறன் கோரி உள்ளார்.

இது சம்பந்தமான மனு ஒன்றை தமிழ்நாட்டுக்கு வந்த மனித உரிமை ஆணைக்குழுவிடம் நெடுமாறன் சமர்ப்பித்தார்.

காவலில் உள்ள இந்த ஈழத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் அல்லது செஞ்சிலுவைச் சங்கத்திடம் அவர்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் நெடுமாறன் தமது மனுவில் கோரி உள்ளார்.

நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தலைமையில் தமிழகம் வந்த இந்த ஆணைக்குழுவில் நீதிபதி பத்திமா வீவீ, நீதிபதி மல்லிமஸ், கமிசன் உறுப்பினர் ஜி. தயாள் ஆகியோர் இடம்பெற்றனர்.

இந்த ஆணைக்குழு அடையாறில் நடத்திய விசாரணையின் போதே திரு. நெடுமாறன் தமது மனுவைச் சமர்ப்பித்தார்.

இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கத்தின் சார்பில் ரி. என். கோபாலன் சமர்ப்பித்த மனுவில், தமிழகத்தில் இலங்கை அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு ஆணைக்குழு செல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழ் ஆர்வலர் மன்றம் சார்பில் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன் கவிஞர் வா. உ. சேதுராமன் ஆகியோரும் மனுக்களைச் சமர்ப்பித்தனர்.

இலங்கை தமிழ் அகதிகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் அரசு தொடர்ந்து ஈடுபடுகின்றது

### சந்திரிகா நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, டிச. 17

"வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணும் முயற்சியில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட்டுள்ளது".

வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரித்தார்.

மனித உரிமை பேணல் உட்பட அரசு சகல துறைகளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் வங்கி வசதியை ஒழிக்க அரசு முடிவு!

கொழும்பு, டிச. 17

பணத்துக்கு உரியவரின் பெயரை இரகசியமாக வைத்துக் கொண்டு கணக்கு இலக்கத்தின் மூலம் மட்டும் தொடர்புகளை பேணும் சுவிஸ் வங்கிக் கணக்கு வசதியை நாட்டில் அடுத்த ஆண்டு முதல் ஒழித்துவிட அரசு தீர்மானித்துள்ளது.

சுவிஸ் வங்கிக் கணக்கு முறை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்

( ஆம் பக்கம் பார்க்க)

### பொருள்களை எடுத்துவர

## சிறிய கப்பலை அமர்த்த கூட்டுறவு சங்கங்கள் முடிவு

யாழ்ப்பாணம், டிச. 17

அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு ஆயிரம் மெற்றிக் தொன் நிறையுடைய சிறிய கப்பல் ஒன்றை வாடகைக்குஅமர்த்த கூட்டுறவுச் சங்கங்கள் நேற்று முடிவு செய்தன.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் ப. நோ. கூ. சங்கங்கள், யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் நேற்று கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் கூடி இந்த முடிவைஎடுத்தனர்

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாக விவசாய மற்றும் பொருள்களை எடுத்து வரவும் முடிவு செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து புனர்வாழ்வுப்பிரிவின் பொருள்கள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வத்திக்கான் தலைவர் என்ற முறையில் பாப்பரசரை சந்திரிகா வரவேற்பார்

### மகாநாயக்கர்களின் பகிஷ்கரிப்பு பயமுறுத்தல் குறித்து அரசு அறிக்கை

கொழும்பு, டிச. 17

பாப்பரசரின் இலங்கை விஜயத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக மகாநாயக்கர்கள் விடுத்த அறிக்கை தொடர்பாக, அரசாங்கத்தின் நிலையை விளக்கி, ஜனாதிபதி செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

"முன்னைய அரசு பாப்பரசருக்கு விடுத்த அழைப்பை அமுல் நடத்த வேண்டியதன் கடப்பாடுகளை நிறைவேற்று முகமாக பாப்பரசரை வரவேற்கும் ஒழுங்குகளை இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது.

"இலங்கை அரசின் தலைவர் என்ற முறையில் வத்திக்கான் அரசின் தலைவரான பாப்பரசரை ஜனாதிபதியே வரவேற்பார்.

மகா நாயக்கர்களின் புனிதமான உணர்வுகளை மதிக்கும் அதேவேளையில் மகாநாயக்கர்களின் அறிக்கையில் வெளியிடப்பட்ட இரண்டு விடயங்களும் வெவ்வேறானவை ஆகும். அரசினால் அவை வெவ்வேறாகவே கையாளப்படும் என்பதையும் அரசு தெளிவுடுத்த விரும்புகின்றது.

இவ்வாறு ஜனாதிபதி செயலகம் நேற்றுவிடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பாப்பரசர் சமீபத்தில் வெளியிட்ட புத்தகம் ஒன்றில்

( 3ஆம் பக்கம் பார்க்க)

### விடைத்தாள்கள் ஹபரணையில் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், டிச. 17

கடந்த வாரம் நடந்த ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை விடைத்தாள்கள் எதிர்வரும் புதன்கிழமை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

தற்சமயம் பருத்தித்துறையில் மா இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹபரண' கப்பல் எதிர்வரும் புதன்கிழமை திருகோணமலைக்குச் செல்லும்போது விடைத்தாள்கள் எடுத்துச் செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கு

( 4ஆம் பக்கம் பார்க்க)

### அரச மொழி ஆணைக்குழு உறுப்பினர்கள்

கொழும்பு, டிச. 17

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அரசாங்க மொழி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஆறுபேரை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

தலைவராக சாள்ஸ் அபேசேகராவும் உறுப்பினர்களாக பேராசிரியர் ஜே. பி. திஸநாயக்கா, திரு. ஆர். பாலசுப்பிரமணியம், எம். ஜமீல், ரெஜி சிறிவர்த்தனா, திரு. பீ. மாணிக்கம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

[இ-ஐ-6]

### ★ ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை

## மாவட்ட ரீதியிலான முடிவுகளை தெரிவு செய்ததில் கணணித் தவறு!

### திருத்தப்பட்ட முடிவுகள் விரைவில்

கொழும்பு, டிச. 17

கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஜி சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மாணவர்களின் மாவட்ட ரீதியிலான நிலைகளைத் தெரிவு செய்வதில் கணணித் தவறு இடம் பெற்றுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் இத்தவறு திருத்தப்பட்டு விடும் என்றும்—

இதனால் மாணவர்களின் தனிப்பட்ட பெறுபேறுகளில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும்—

திருத்தப்பட்ட மாவட்ட மட்ட நிலைகள் ஏற்கனவே கொழும்பில் இருந்து பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும்—பரீட்சை ஆணையாளர் நாயகம் திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்

இதேவேளை—

தனிப்பட்ட பரிட்சார்த்திகளின் தேசிய ரீதியிலான, மாவட்ட ரீதியிலான நிலைகளில் எந்தவித மாற்றமும் இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியர்களுக்கு இம்மாதம் 1,300 ரூபா நிலுவை கிடைக்கும்

யாழ்ப்பாணம், டிச. 17

யாழ். மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்களுக்கு இம்மாத ஓய்வூதியத்துடன் 1,300 ரூபா மேலதிகமாகக் கிடைக்கவிருக்கிறது.

ஐந்து மாதங்களுக்குரிய வாழ்க்கைச் செலவுப் படி நிலுவையே இம்மாதம் வழங்கப்படவுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ். செயலக ஓவூய்தியப் பிரிவுக் கணக்காளர் திரு. க. வீரசிங்கம் ஒய்வூதியப் பணிப்பாளரிடம் வாழ்க்கைச் செலவுப் படியாக 260 ரூபாவை 5 மாதத்துக்கு வழங்கும் சுற்றறிக்கையைப் பெற்று உடனடியாக டிசம்பர் மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கும் வகையில் நடவடிக்கை எடுத்திருந்தார்.

நேற்று யாழ். செயலகத்துக்கு வந்துள்ள டிசம்பர்மாத வவுச்சர்களில் இந்த நிலுவைப் பணம் 1,300 ரூபாவும் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரையான 5 மாத காலத்துக்கு வாழ்க்கைச் செலவுப்படி கொடுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 17

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்

(ஐ-3)

## வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அரசுக்கு தொண்டமான் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 17

பதுளை கலன் தோட்டப் பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் தீர்வு காண அரசு முன் வரா விட்டால் ஊவா மாகாணத்தில் உள்ள சகல தோட்டங்களிலும் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கும்.

மேற்கண்டவாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் எஸ். தொண்டமான்.

கலன் தோட்டத்தின் 99 வருடகால குத்தகை முடிவடைந்துள்ளதால், புதிதாக பொறுப்பேற்கும் நிர்வாகத்தை யிட்டு தோட்டத் தொழிலாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்றும்—

தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு அரசு தீர்வுகாண தவறும் பட்சத்தில் அவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பார் என்றும்—அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

### காங்கேசனில் உள்ள

## 2 சிமெந்து ஆலைகளையும் ஒன்றாக்கி இயக்க ஆராய்வு

யாழ்ப்பாணம், டிச. 17

காங்கேசன்துறையில் உள்ள இரு சிமெந்து ஆலைகளையும் இணைத்து ஒன்றாக்கி இயக்குவதற்கு உயர் மட்டத்தில் ஆராயப்படுவதாக கொழும்பு புத்தகவல்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறையில் சிமெந்து கூட்டுத்தாபனத்தின் ஆலையும், லங்கா சிமெந்து நிறுவனத்தின் ஆலையும் முன்னர் அருகருகே. இயக்கிவந்தன.

போர் தொடங்கிய பின்னர் இராணுவ நடவடிக்கைகளின் போது இரு ஆலைகளும் சேதமடைந்தன.

இந்த இரு ஆலைகளையும் திருத்தி மீண்டும் இயக்குவது தொடர்பாக ஆராய்வதற்காக அங்கு சென்றிருந்த உயர்மட்டக்குழு ஒன்று சமர்பித்த அறிக்கையையடுத்து இரு ஆலைகளையும் ஒன்றாக்கி இயக்க உயர்மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

சிமெந்து கூட்டுத்தாபனத்தின் சேதமடைந்த இயந்திராதிகளுக்குப் பதிலாக லங்கா சிமெந்து நிறுவனத்தின் இயந்திரங்களை பாவிக்கவும்—

இரு ஆலைகளின் தொழிலாளர்களையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவும்—அரசமட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரியவந்தது.

இரு ஆலைகளையும் திருத்தி தனித்தனியாக இயங்கவைக்க பல கோடிரூபா தேவை என்பதால் அவற்றை ஒன்றாக இயக்குவது குறித்து ஆராயப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

(அ-3)

### அகதி முகாம்களில் இருந்தவாறு

## மணம் முடிக்க விரும்பும் ஜோடிகளுக்கு 25 ஆயிரம்

### விசேடகொடுப்பனவு வழங்கதிட்டம்

கொழும்பு, டிச. 17

அகதி முகாம்களில் இருந்தவாறு திருமணம் செய்ய விரும்பும் ஜோடிகளுக்கு விசேட கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி திருமணம் செய்ய விரும்பும் ஜோடிகளுக்கு 25ஆயிரம்ரூபா வழங்க புனர்வாழ்வுபுனரமைப்பு துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவுக்கு 'விவாகத்தை விரும்புபவர்களுக்கான கொடுப்பனவு'' எனப் பெயரிடப்பட்டுள்ளது

இத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள புதுமணப் பெண்ணும் மாப்பிள்ளையும் அகதி முகாமில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

முச்சந்தி முரளி



உவர் அஷ்ரப்பின்ர திட்டம் அகதி முகாம்களைப் பெருக்கிற திட்டமாய் எல்லோ இருக்கு......

### டாக்டர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, டிச. 17

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களின் வேலை நிறுத்தம் நேற்று மாலை கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முன்னர் வேலை நிறுத்தம் செய்த உதவி வைத்திய அதிகாரிகள், பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளின் கோரிக்கைகளை அரசு ஏற்றதை ஆட்சேபித்தே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் [G.M.O.A] வேலை நிறுத்தம் செய்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1995 நாட் கலண்டர்கள், மாதப்படக் கலண்டர்கள், விற்பனைக்குண்டு. கிறிஸ்தவ படங்கள் பலரகங்கள் உண்டு. வியாபாரிகள் தங்கள் விலாச மிட்டு பதிப்பித்துக்கொள்ள லாம். விசேஷ கழிவுண்டு. குறைந்தளவே கையிருப்பில் உள்ளது. மகாலக்சுமி அச்சகம், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (8084)

Honda ஜெனரேட்டர் (1,500 Watts) Sony T. V. 2093 Toshiba Video Deck Sansui Amplifier (100Watts) RXCW 25F Double Cassette Set ஆகியன விற்பனைக்கு உண்டு. டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-15)

அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழிமுட்டைகள், வான்கோழிமுட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34122)

றேடியோ, சுவர் — கைக் கடிகாரங்கள், சில்வர் பிளாஸ்ரிக் பொருள்கள், பாடசாலை — தையல் உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: ஜெயா அழகு மாடம், இல. 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9837)

### கார் விற்பனைக்கு

மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார் ஒன்று விற்பனைக்கு உண்டு. இந்தக் காரையும், மேலதிக ரொக்கத்தையும் கொடுத்து பாவனையில் நல்ல நிலையில் உள்ள கார் ஒன்றை மாற்றவும் விருப்பம். இல. 734, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-9842)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் நாள்தோறும் 7 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34221)

### தேவை

எமது ஸ்தாபனத்தில் வேலை பயில விரும்பும் பெண்பிள்ளை தேவை. ஓரளவு ஆங்கில அறிவுடன் தபாலில் மட்டும் விண்ணப்பிக்கவும். வீமா றபர் ஸ்ராம்ஸ் 234, நாவலர் வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (34204)

### ஆண்டு - 4, 5

ஆண்டு – 4 (புலமைப்பரிசில் 1996) மாதிரி வினாத்தாள் 18-12-94 ஞாயிறு வெளியிடப்படும். 11-12-94 இல் வெளியிடப்பட்ட ஆண்டு – 5 (புலமைப் பரிசில் 1995) மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (34198)

### மணமக்கள் தேவை

படித்த, அழகான, சுத்த போசன, செவ்வாய்க் குற்ற மற்ற, அச்சுவினி நட்சத்திர, இந்து. 27 வயதுடைய பெண்ணுக்கு உத்தியோக மணமகனும், 36 வயது, வியாபாரம் செய்யும், பூரட்டாதி நட்சத்திர மணமகனுக்கு உத்தியோக மணப்பெண்ணும் தேவை. சாதகத்துடன் தொடர்புகொள்ளவும்: இல. 959, மே/பா உதயன். (8086)

### மணிக்கூடு திருத்தல்

சகலவித மணிக்கூடுகளையும் மற்றும் றேடியோக்கள், ரி. வி. டெக்குகளை பழுது பார்த்துக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை. (சி-9912)

### O/L DEC. 94

நடைபெற்ற ஆங்கில வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25 வீதம் கழிவு வழங்கப்படும். Bond யாழ்ப்பாணம். (8090)

### அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936)

### மணமகள் தேவை

கல்வியும் பரந்த சிந்தையும் குணநலன்களும் பொருந்திய பெண்ணை இந்துப் பெற்றோர் தமது மகனுக்கு மணமகளாகப் பெற விரும்புகின்றனர். சீதனம் முக்கியமல்ல. மணமகன் கொழும்பில் கௌரவமான பதவியில் உள்ளவர். 32 வயது, அனுஷம், கிரகபாவம் குறைவு. விவரங்களுடன் சாதகக் குறிப்பை அனுப்புக. இல. 733, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34195)

## 1995இற்கு

உபயோகம் மிக்க ஒரு கலண்டரை மலிவு விலையில் பெற

## ஆனந்தா

பஞ்சாங்கக்

## கலண்டர்

நாள், திதி, நட்சத்திரம், யோகம், கோயில் தினங்கள், விடுமுறை நாட்கள் யாவும் அடங்கியது.

**விலை ரூபா 30/- மட்டும்**

(சி-0001)

---

புதிய பிரிவுகள்

## ஆரம்பமாகின்றன

- ✶ C. I. M. A.
- ✶ I. A. B.
- ✶ BASIC
- ✶ LOTUS
- ✶ SHORT-HAND
- ✶ TYPING

மேலும் விவரங்களுக்கு:


## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET, JAFFNA. (சி-9841)

---


# நினைவஞ்சலி

31ஆம் நாள் 124ஆம் நாள்



திருமதி
**நடராசா நாகமுத்து**

மலர்வு: 10 — 07 — 1930
உதிர்வு: 17 — 11 — 1994



செல்வன்
**நடராசா யோகராசா**
(அமீன் – அரசன்)

மலர்வு: 09 — 11 — 1966
உதிர்வு: 18 — 08 — 1994

அணையாத ஒளிவிளக்காய் ஒளிர்ந்த நீங்கள்
அணைந்த விதம் புரியவில்லை எங்களுக்கு
துணையிழந்து தவியாய் தவிக்கின்றோம்
தூயவரே நீங்கள் என்றென்றும் அமைதிகொள்வீர்.

கணவர், தந்தை: நடராசா,
(காங்கேசன்துறை)
பிள்ளைகள், மருமக்கள்.

306/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

[34212]

---

உ
சிவமயம்
''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்''

## காரைநகர் மணிவாசகர் சபை

# மணிவாசகர் விழா

(40ஆவது ஆண்டு)

நாளை **18 - 12 - 1994** ஞாயிற்றுக்கிழமை காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் தேஸ்தான மண்டபத்தில் பிற்பகல் **2-00** மணியளவில் விழா நடைபெறும்.

சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

✶ நிகழ்ச்சி நிரல் ✶

தலைவர்:
பண்டிதர் திரு. மு. சு. வேலாயுதபிள்ளை அவர்கள் (மணிவாசகர் சபை உப தலைவர்)

திருவாசகத் திருமுறை ஓதல்:
செல்வி பரமேஸ்வரி கணேசன்

தலைமையுரை:

ஆசியுரை:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

வாழ்த்துரை:
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சொற்பொழிவு:
**"திருப்பெருந்துறையுறை சிவபெருமானே"**
திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் (பொறுப்பதிகாரி, வலி-மேற்கு பிரதேச சபை, உப அலுவலகம்-சங்கானை)

காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய சமய பாடப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கமும், முதன்மைச் சித்தியடைந்த 45 மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

பரிசில் வழங்கல்:
நன்றியுரை:

**செ. தேவதாசன்**
B. A. Dip-in-Edu.,
தலைவர்.

**து. நாகேந்திரன்,**
செயலாளர்.

ஆதரவு:
குறிஞ்சி மருந்தகம்,
KURINCHI PHARMACY
No-3, Model Market, Thirunelvely.

[34214]

---

# கலை, வர்த்தக கல்லூரி

## C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94

பரீட்சை முடிவு வெளிவந்த மாணவர்களுக்கான:

வகுப்புகள் சனி, ஞாயிறு நாட்களில்

**ஆரம்பம்: 18 - 12 - 1994**

| | | | நேரம் |
|---|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் | 5 — 6 |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ | 1 — 3 |
| வர்த்தகம் | — | திரு. ரட்ணம் | 3 — 4 |
| அளவையியல் | — | திரு. சயந்தன் | 4 — 5 |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதி | 8 — 9 |
| தமிழ் | — | திரு. கணேஸ் | 10 — 11 |
| புவியியல் | — | திரு. வேலா | 11 — 12 |

— நிர்வாகி.

[சி-11]

---

# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 16 — 04 — 1942
மறைவு: 28 — 12 — 1993

அமரர்
## சின்னத்துரை அசோக்குமார்
(பிரபல அரச ஒப்பந்தகாரர்)

**திதி: 17 — 12 — 1994**

பாரெல்லாம் பரிதவிக்க பறந்தோடிப் – போனதேனோ
எம்மை எல்லாம் தவிக்க வைத்து மாயமாய் – மறைந்ததேனோ
ஆண்டு நூறு சென்றாலும் அகன்றிடுமோ – உம் நினைவு
வேண்டுகிறோம் விநாயகனை; உமதாத்மா– சாந்திக்கு

நேசமுள்ள கணவனாய், பாசமுள்ள தந்தையாய், யாவர்க்கும் உபகாரியாய், சிறந்த சமூக சேவையாளனாய் வாழ்ந்து முதிரமுன் உதிர்ந்து விட்டீர்!

உம் நினைவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர், நண்பர்கள்.

நாகர்கோயில் வீதி,

(34206)

---

பட்டப் படிப்புகள் கல்லூரி

## புதிய மாணவர்களை அனுமதித்தல்

## கல்வியாண்டு 1995/96

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப் பாட நெறிகளான

- ★ கலை முதற் தேர்வு G. A. Q.
- ★ கலைமாணி பகுதி I B. A. Part I
- ★ கலைமாணி பகுதி II B. A. Part II
- ★ வர்த்தக முதற் தேர்வு First in Commerce
- ★ வணிகமாணி பகுதி I B. Com. Part I
- ★ வணிகமாணி பகுதி II B. Com. Part II
- ★ வணிகமாணி பகுதி III B. Com. Part III
- ★ விஞ்ஞான முதற் தேர்வு (G. S. Q) புள்ளிவிவரவியல்
- ★ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிவரவியல்)

மேலே குறிப்பிட்ட பாட நெறிகளுக்கான புதிய விரிவுரைகள் **01 — 01 — 1995** ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:

**உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

''கடந்த 20 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ். நகரில் இதுவே.

[சி-9811]

---

# வியாபாரிகளுக்கு

கிறிஸ்மஸ் கொண்டாட்ட

- ✶ எவர் சில்வர்
- ✶ பிளாஸ்ரிக் பொருள்களையும்

— மற்றும் —

- ✶ தையல்
- ✶ பாடசாலை உபகரணங்கள்
- ✶ றேடியோ
- ✶ கைக்கடிகாரங்கள்
- ✶ பொலித்தீன் வகைகள்
- ✶ அழகு சாதனப் பொருள்கள்

— அனைத்தையும் —

மொத்தமாகப் பெற்றுக் கொள்ள விரையுங்கள்!

# ஜெயா அழகுமாடம்

187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம்:
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-9826]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக பிரிவுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**94 பரீட்சையில் தோற்றிய மாணவர்க்கான**

## மீட்டல் DAY CLASSES

**ஆரம்பம்: 19-12-94** (8.00-2.00 மணி)

- ✶ ECO. — திரு. இராஜேஸ்வரன்
- ✶ ACC. — S. K. பிரபாகரன்
- ✶ LO. — திரு. A. பிரபா
- ✶ COM. — திரு. சிவப்பிரகாசம்

- வாரத்தில் நான்கு நாட்களும் நடைபெறும்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
- பிரிவு - I நடைபெறுகின்றன.

[சி-3]

---

# சிவாகி கல்வி நிலையம்

சிவன் வீதி, சாவகச்சேரி.

**94 பரீட்சை எடுத்த மாணவருக்கான**

## மீட்டல் வகுப்பு

**ஆரம்பம்: 18 - 12 - 1994**
காலை 7-30 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | லோகசிங்கம் |
| கணக்கியல் | — | S. K. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | வரதன் |
| புவியியல் | — | நித்தி |
| இந்துநாகரீகம் | ) | நவரட்ணராஜா |
| இந்துசமயம் | ) | |
| அளவையியல் | — | A. பாரதி |
| அரசியல் | — | பொன். சந்துரு |
| தமிழ் | — | தர்மராஜா |

(8088)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## வாசுதேவவின் இடித்துரைப்பு

நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் பெரிய நெருக்கடி இனப்பிரச்சினையாகும். அதற்கு அரசியல் தீர்வு காணக்கூடியதாக புதிய அரசமைப்பை இயற்றாவிடில், அதனால் எவ்வித பயனுமே கிடைக்கப்போவதில்லை—

கொழும்பில் கடந்தவாரம் நடைபெற்ற சமாதான விழாவில் உரையாற்றும்போது திரு. வாசுதேவ நாணயக்காரா இவ்வாறு தெரிவித்தார்.

திரு. வாசுதேவ நாணயக்காரா நவசமசமாஜக்கட்சியின் ஸ்தாபகர். இப்போது பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கிறார். தமிழர் பிரச்சினை குறித்து எப்போதும் நியாயமாக, யதார்த்தமாகத் துணிச்சலுடன் பேசி வருபவர். தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி வருபவர்.

புதிய அரசாங்கம் தனது முக்கிய பணிகளாக மூன்று விடயங்களை முன்னிறுத்தி உள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது; அரசமைப்பைத் திருத்திப் புதுக்கி இயற்றுவது; பொருளாதார மேம்பாட்டை உண்டாக்குவது; இவை மூன்றுக்குமே முன்னுரிமை கொடுத்துச் செயற்பட அரசு முனைந்திருக்கிறது.

இவற்றில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதும், அரசமைப்பைத் திருத்துவதும் ஒன்றுக்கு மற்றது தொடர்பு உடையது எனலாம். அதாவது ஒற்றையாட்சி அரசமைப்பைத் தூக்கி வீசாமல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது என்பது யதார்த்தத்துக்குப் புறம்பானதாகும்.

ஆனால் சந்திரிகாவும் சரி, அவரின் மந்திரிப் பிரதானிகளும் சரி, அரசமைப்பு மாற்றம் குறித்து கருத்து அல்லது தகவல் வெளியிடும்போது, தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வகையில் அது மாற்றப்படும் என்பதற்கான அறிகுறி எதனையும் வெளியிட்டதாக இல்லை.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; அதற்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று சிங்கள மக்களும் சேர்ந்து ஆணை கொடுத்த பின்னரும், தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவதில் அரசாங்கம் அக்கறை காட்டாதிருப்பது விசனத்துக்கு உரியதாகும்.

அரசு ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறது என்பது புரியாத புதிராகவும் உள்ளது. மறுவளமாகச் சொல்வதானால், சந்திரிகா அரசும் ஒற்றையாட்சி முறையையே கவ்விப் பிடித்துக்கொண்டிருக்க விரும்புகிறது என்பது புலனாகிறது.

இதனை, திரு. வாசுதேவ நாணயக்காராவும் இனங்கண்டிருக்கிறார். அதனாலேயே அவர், தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை இடித்துரைத்துள்ளார்.

அரசமைப்பு விவகார அமைச்சரான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அரசியல்வாதியாக மாறுவதற்கு முன்னர் ஒன்றையாட்சி முறையை மாற்றுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்; என்ற கருத்து உடையவராக இருந்தவர். ஆனால் இப்போது அதனை மறந்து போனவராகக் காணப்படுகிறார்.

புதிய அரசும், அமைச்சர்களும் பழைய அரசின் போக்கையே பின்பற்ற முனைந்தால் இனப்பிரச்சினைக்கு இவர்களாலும் தீர்வுகாண முடியாது போகும்! சமாதானத்தை எய்துவது என்பதும் வெறும் கற்பனையாகவே முடியும்! பேச்சுவார்த்தை அரசியல் தீர்வே இலக்கு என்பன வெறும் "புலுமாசு" ஆகிவிடும்!

வாசுதேவ, அரசின் பின்னாசனக்காரராக இருக்கலாம். ஆனால் நாட்டைப் பீடித்துள்ள ஆபத்தான நோயிலிருந்து அதனை உயிர்மீட்க அவரது கருத்தே அருமருந்து. அதனை அரசாங்கம் மனங்கொள்ளாவிடில், சமாதானத்துக்கான இந்தக் கடைசி பஸ்ஸையும் தவறவிடுவது நிச்சயமாகிவிடும்!

# புதிய ஆசிரியர்கள் பெப்ரவரியில் நியமனம்

கொழும்பு, டிச. 17

நாடெங்கிலும் பாடசாலைகளில் இருந்து வரும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு புதியவர்கள் அடுத்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி நியமிக்கப்படுவர் என்று அறிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் குறைபாடுகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கு செயற்குழு ஒன்றை கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான நியமித்துள்ளார். (ஒ-எ)

### யாழ். மாநகர சபைப் பகுதியில்

# கழிவுப் பொருள் அகற்ற கட்டணம் அறவிடப்படும்!

## புத்தாண்டு முதல் புதிய திட்டம்!

குருநகர், டிச. 17

யாழ். மாநகரப் பகுதியில் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்துவதற்கு எதிர்வரும் புத்தாண்டு முதல் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சேரும் கழிவுகளை அங்கிருந்து அகற்றுவதற்கு— கழிவுப் பொருள்களின் வகைதொகை அடிப்படையில் — சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கட்டணம் அறவிடுவதே புதிய திட்டமாகும்.

உத்தேச புதிய திட்டத்தை புத்தாண்டில் இருந்து அமுல்படுத்தும் நோக்கில் அதற்கான முன்னேற்பாடாக —

உணவுச்சாலைகள், வைத்தியசாலைகள், தொழில்நிறுவனங்கள் மற்றும் பலசரக்கு கடைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், வெதுப்பகங்கள் ஆகியனவற்றின் உரிமையாளர்களுடன் இது தொடர்பான ஒப்பந்தங்களைப் பதிவு செய்வதில் யாழ். மாநகரசபை தற்சமயம் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-51)

### ராஜீவ் கொலை விசாரணை:

# திருமணப் பதிவாளர் நாடு திரும்பிவிட்டார்

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாட்சியமளிக்க மட்டக்களப்பில் இருந்து இரகசியப் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட திருமணப் பதிவாளர், இந்தியாவில் அவ்வழக்கில் சாட்சியமளித்த பின்னர் நாடு திரும்பிவிட்டார்.

இத் தகவலை கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் சமாதான சூழ்நிலை நிலவிய காலத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவரின் திருமணத்தில் இவர் திருமணப்பதிவாளராக இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மீது இசிபத்தான மாணவர் தாக்குதல்!

## கட்டட ஜன்னல்கள் நொறுங்கின; பரீட்சையும் பாதிப்பு

கொழும்பு, டிச 17

கொழும்பு இசிபத்தான தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவர் கோஷ்டி ஒன்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்குள் புகுந்து மாணவர்களைத் தாக்கியது. அங்கிருந்த கண்ணாடி ஜன்னல்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றது.

இத்தாக்குதல் சம்பவம் நடைபெறும்போது அங்கு ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தகவல் தெரிவிக்கும் போது கூறியதாவது:

இசிபத்தான மாணவர்கள் கற்கள், தடிகள், ஹொக்கித் தடிகள் போன்றவற்றுடன் வான் ஒன்றில் இந்துக் கல்லூரிக்கு முன்னால் வந்து இறங்கினர்.

வந்தவர்கள் கல்லூரியை நோக்கி சரமாரியாக கற்களை வீசினர். இந்துக் கல்லூரி மைதான "கேட்" தூக்கி வீசப்பட்டது.

அதன் வழியாக இசிபத்தான மாணவர்கள் சாரி சாரியாகப் புகுந்து இந்துக் கல்லூரியின் புதிய கட்டட ஜன்னல்களை அடித்து நொறுக்கினர். சிறிது நேரம் இந்த இடம் ஒரு யுத்தகளம் போல் காட்சியளித்தது,

இத்தாக்குதலை அடுத்து இந்துக் கல்லூரி மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இவர்கள் மீது செங்கற்கள் பல அடுத்தடுத்து வீசப்பட்டன.

இத்தாக்குதலுக்கு காரணம் என்ன என்பது குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக பம்பலப்பிட்டி பொலீஸார் தெரிவித்ததாவது:

மாணவர் கோஷ்டி மோதல் இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து அவ்விடத்துக்குச் சென்று அமைதியை நிலைநாட்டினோம். சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை அழைத்து அறிவுரை வழங்கினோம்—என்று கூறினர். (ஒ)

### பாதாள உலகின் மற்றொரு தலைவர்

# பங்களா கூரையின் கீழ் பதுங்கியிருந்தபோது கைது!

கொழும்பு, டிச. 17

பாதாள உலகின் இன்னொரு தலைவரான அஜித் என்பவர், பண்டாரவளையில் உள்ள பெரிய பங்களா ஒன்றின் மேற்கூரையின் கீழ் பதுங்கியிருந்த போது கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அஜித்தின் சகோதரர் பாணந்துறையில் உள்ள வீடொன்றில் ஒளித்திருந்த போது கைது செய்யப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் அத்துலத்முதலி, தற்போது அமைச்சராகவுள்ள சி. வி. குணரத்னா ஆகியோரை கொல்ல முயற்சித்த சம்பவங்கள் தொடர்பாக இவர்கள் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### போர் முனைக்கு செல்ல மறுக்கும்

# பொலீஸாருக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை

## தடுப்புக் காவலில் வைக்கவும் முடிவு

கொழும்பு, டிச. 17

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் போர் முனைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பொலீஸார் கடமையை ஏற்கத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

"இடமாற்ற உத்தரவை ஏற்று கடமைக்குத் திரும்பாத பொலீஸாரைத் தடுப்புக் காவலில் வைத்து நீதிமன்றங்களில் ஆஜர்செய்வோம்"- என்று தகவலறிந்த பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட சுமார் 40 பொலீஸார் புதிய வேலைத் தலங்களுக்குச் செல்ல மறுத்து சுகயீன விடுமுறையில் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகயீன லீவில் சென்றுள்ள பொலீஸாரில் சிலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாயின் ஏனைய பொலீஸார் புதிய இடங்களுக்குத் தாமாகவே செல்வர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

நீண்டகால சேவையின் பின்னர் – வடக்கு கிழக்கில் இருந்து தென்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுள்ள பொலீஸாரில் பெரும்பாலோர் புதியவர்கள் கடமைகளை [illegible] பழைய இடங்களை விட்டு புறப்பட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### புலிகளின் குரல் வானொலியில்

**17 — 12 — 1994**
**சனி இரவு**

★ 8-01 — அறிவியல் கலசம்.
★ 8-10 — நிகழ்வும்பகிர்வும்.
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம்— ந. கிருஸ்ணா எழுதிய "கடற்பலம்"
★ 9-00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**18 — 12 — 1994**
**ஞாயிறு காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவையின் தொடர்ச்சி.
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## அரியாலையில் மலேரியா

குருநகர், டிச. 17

மலேரியாநோய், அரியாலைப்பகுதியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் வசிப்பிடங்களில் தீவிரமாகப் பரவி வருகிறது.

சமீபத்தில் விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினரால் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இது அறியப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணியரசன் முகாமில் 5 பேரும் டயஸ் குடியிருப்பில் 13 பேரும் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டு அவர்களுக்கு மருந்து வசதி அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-51)

## நாளை

தென்மராட்சி, டிச 17

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தொழிநுட்ப ஆக்கத்திறன் போட்டிகளில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறும். (ஒ-117)

## கண் சோதனை சிகிச்சை முகாம்

தென்மராட்சி, டிச. 17

சாவகச்சேரி லயனஸ் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கண் பரிசோதனை சிகிச்சை முகாம் நாளை ஞாயிறு காலை 7 மணி தொடக்கம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

கண் பரிசோதனையை யாழ். போதனா வைத்திய சாலை டாக்டர் செல்வி [illegible] லான வைத்தியக் குழுவினர் நடத்துவர். (ஒ-117)

## தொண்டர் ஆசிரியருக்கு

தென்மராட்சி, டிச. 17

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற் கடமை புரியும் சகல தொண்டர் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான பொது அறிவு, பொதுஉளச்சார்பு வகுப்புக்கள் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-117)

## உருவப்படம் திரை நீக்கம்

வடமராட்சி, டிச. 17

புலோப்பளைச் சமரில் வீரச்சாவெய்திய முன்னாள் வடமராட்சி விசேட தளபதியும் கனரக ஆயுதப் படையணிப் பொறுப்பாளரும், பயிற்சி ஆசிரியருமான மேஜர் பிறேம்நாத்தின் உருவப்படம் இன்று சனிக்கிழமை துன்னாலை வடக்கு கொடிக்காடு மேஜர் பிறேம்நாத் நினைவாலயத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்படும். (ஒ-173)

## கடற்புலிகளின் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 17

கடற்புலிகளின் வலிவடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவீரர்களின் நினைவுக் கூட்டமும், கலை நிகழ்வும் நாளை ஞாயிறுக்கிழமை இரவு 7 மணியளவில் சுழிபுரம் றாத்தலடி பிள்ளையார் கோவில் முன்றிலில் நடைபெறவுள்ளது. (ஐ)

## இந்திய சிமெந்து இறக்குமதி

கொழும்பு, டிச. 17

இந்தியாவிலிருந்து 4 ஆயிரத்து 300 தொன் சிமெந்து காலித் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட இச் சிமெந்து பக்கற் ஒன்று 230 ரூபா வீதம் விற்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஆலய உண்டியல் திருட்டு

வடமராட்சி, டிச. 17

மந்திகை கால்நடை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள அற்புத அன்னை வழிபாட்டுத் தலத்தில் உள்ள சுவர் மணிக்கூடும், உண்டியல் பணமும் இனந்தெரியாதோரால் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளன. (ஒ-173)

## திரிசாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 17

யாழ். மாவட்ட நல்லூர் திரிசாரணர்களுக்கான கூட்டம் ஒன்று, நாளை ஞாயிறு மாலை 5 மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் திரிசாரணர் தலைவர் திரு. அ. அசோக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## இன்று

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாதகுருபீட வேதாந்த மடத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு மாதாந்த பூரணை தினச் சொற்பொழிவு இடம்பெறும்.

திரு. யோகிறாஜ் 'தியானம்' என்ற பொருளில் உரையாற்றுவார். (ஒ)

★ ★ ★

தென்மராட்சி, டிச. 17

தென்மராட்சி இசை, நடன ஆசிரியர் மன்றத்தினரின் மாதாந்த முழுநிலா இசை அரங்கு இன்று சனிக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மன்றத் தலைவர் பொன். வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இசையரங்கில் செல்வி புனிதகுமாரி ஏரம்பமூர்த்தியின் பாட்டுக்கச்சேரி இடம் பெறும். (ஒ-117)

## முழு நிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 17

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழு நிலா அறிவியல் கருத்தரங்கு இன்று சனி பிற்பகல் 4 மணி முதல் சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் " தனிமனிதனும் தொடர்பாடலும்" என்ற தலைப்பில் யாழ். மருத்துவபீடத்தைச் சேர்ந்த வைத்தியக் கலாநிதி ஏ. சசிகாந்தன் கருத்துரை வழங்குவார். (ஐ)

# பிற மாவட்ட ஆசிரியருக்கு விளையாட்டுத் துறை பயிற்சி

## யாழ். இந்துவில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 17

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உடற்கல்வி விளையாட்டுத்துறைப் பயிற்சி நெறி இன்று முதல் தொடர்ந்து 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியிலும், இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் தெரிவு செய்யப்பட்ட 60 ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் இன்று சனி காலை 8 . 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்

## றோட்டறி விருது வழங்கல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 17

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று முற்பகல் நடைபெவிருந்த யாழ். றோட்டறிக் கழகத்தின் தொழில்துறைசார் வல்லுநர்களுக்கான விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### சிறிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துவரும் கப்பல்களில் எற்படும் மேலதிக இடத்தை ப. நோ. கூ. சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து உதவவேண்டும் என்று அரச அதிபரைக் கோரவும் முடிவு செய்யப்பட்டது. (இ-3-4)

### வத்திக்கான்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த மதம் குறித்து குறிப்பிட்டிருக்கும் கருத்து தமக்கு ஏற்புடையதாக அல்ல என்றும் —

இதனால் அவரை வரவேற்கும் எந்த வைபவத்திலும் கலந்து கொள்வதில்லை என்றும் — நான்கு பௌத்த மத பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே ஜனாதிபதி செயலகம் மேற்கண்ட அறிக்கையை நேற்று விடுத்தது. (இ-எ)

## சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், டிச. 17

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும் ஆய்வரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

ஆய்வரங்கில் மாணவர்கள் பங்குகொள்ளும் அரங்கும் இடம்பெறும். தொடர் விரிவுரையை திரு. ப கனகலிங்கம், திரு. எஸ். பத்மநாதன் ஆகியோர் வழங்குவர். பயிலரங்கை திரு.கே.சாம்பசிவமும், திரு.பி.இரத்தினசேகரும் நடத்துவர். (ஐ)

## அதிரவைத்த ஷெல்

யாழ்ப்பாணம், டிச. 17

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராவத்தினர் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலை வேளையில் இடம்பெற்ற இத்தாக்குதலால் கரையோரப் பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். (இ-3)

## இலவச மூக்குகண்ணாடி

யாழ்ப்பாணம், டிச 17

நாளை மாலை 4 மணியளவில் சுண்டுக்குளி வடக்கு சனசமூக நிலையத்தில் 35 பேருக்கு யாழ் லயன்ஸ் கழகத்தால் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் ' நீரழிவு வராமல் காப்பதெப்படி' என்பது பற்றி டாக்டர் எஸ்.பி.ஆர். சிர்மாறனும் 'வாய்ச்சுகாதாரம்' பற்றி டாக்டர் ஜீவானந்தமும் உரை நிகழ்த்துவார்கள். [இ]

கல்வாரி பூரண சுவிஷேச ஊழியங்களின்

## விஷேச நிகழ்ச்சிகள்

இன்று **17 — 12 — 1994**
மாலை **3-30** மணி — "தாரகை உதித்தது"
சிறுவர் நத்தார் சிறப்பு நிகழ்ச்சி
('கல்வாரித் தொனி' சஞ்சிகை வெளியிடுதல்)

**18 — 12 — 1994** மாலை **3-30** மணி —
சிறுவர் நத்தார் நிகழ்ச்சி/ கரோல் கீதங்கள்
(மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெறும்)

**23 — 12 — 1994** மாலை **3-30** மணி —
"தேடி வந்த இயேசு"
நத்தார் கீதங்கள் (கரோல்)

**25 — 12 — 1994** காலை **9-00** மணி —
கிறிஸ்மஸ் ஆராதனை
சகல இடங்களிலும் நடைபெறும்.

**31 — 12 — 1994** இரவு **10-00** மணி —
விழிப்பிரவு ஆராதனை
பிரதான சபையில் நடைபெறும்.

**01 — 01 — 1995** காலை **9-00** மணி —
புதுவருட ஆராதனை
சகல இடங்களிலும் நடைபெறும்.

★ இந் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"நேரந்தவறின் ஆசனம் தவறும்"

சபை மேய்ப்பன்,
கல்வாரி
**பூரண சுவிஷேச ஊழியங்கள்,**
இல. 89, பிறவுண் வீதி, கொக்குவில்.
(34235)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கமலம்மா பரமசாமி

எமது மகா வித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, நல்லூர் ஆசிரிய காலசாலைகளின் பழைய மாணவியும் அனலைதீவு சதாசிவ வித்தியாலயம், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம் ஆகியவற்றிலும் எமது மகா வித்தியாலயத்திலும் பல தசாப்தங்கள் ஆசிரியப் பணிபுரிந்து ஒய்வு பெற்றவருமாகிய கமலம்மா பரமசாமி கொழும்பில் 11 ஆம் திகதி ஞாயிறு அதிகாலையில் காலமாகிய செய்திகேட்டு வருந்துகிறோம்.

அன்னாரின் புத்திரர் பிரபாகரன், மனோகரன் (கனடா), புத்திரி ஆனந்தி சித்திரவேல் (சுவீடன்) ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைக

யா / கரம்பன் சண்முகநாத
மகா வித்தியாலயம்

(34227)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா முருகேசபிள்ளை

ஆலங்குளாய், சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை இளைப்பாறிய ஆசிரியர் திரு. பொன்னையா முருகேசபிள்ளை நேற்று (16-12-94) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிவகுமார் (மானிப்பாய் ப. நோ. கூ. ச.), சந்திரகுமார் (ஆசிரியர் சென். தோமஸ் பண்டார வளை), பிறேமராணி, நிர்மலராணி (ஆசிரியை, யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்), பிறேம்குமார் (ஆசிரியர், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சண்முகநாதன் (நில அளவையாளர் நியத்தலாவ), ஜமுனாதேவி, சசிகலா, சிவபாலசந்திரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), ஜெயந்தி (ஆசிரியை, கிளிநொச்சி) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ் சென்ற கதிராசிப்பிள்ளை மற்றும் அம்பலவாணர் (மலேசியா), கனகசபாபதி (கனடா), இராசம்மா, கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17-12-1994) சனிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்!
மு. சிவகுமார் (மகன்)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். [34226]

## திருமதி சதாசிவம் புவனேஸ்வரி (பூ)

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் 25/3, B. M. C. லேனில் வசித்தவருமாகிய, திருமதி சதாசிவம் புவனேஸ்வரி அவர்கள் 15-12-94 வியாழன் அன்று காலமானார்.

அன்னார் திருமதி சி. சதானந்தி (கனடா), சதானந்தன் (தேசிய தொழில் பயிற்சி பரிசோதகர், கொழும்பு), திருமதி புஸ்பானந்தி, திருமதி ரஞ்சிதானந்தி, ஜீவானந்தன் (நெதர்லாந்து), பிரேமானந்தி ஆகியோரின் அன்புக்குரிய தாயாரும், சிவரட்ணம் (கனடா), திருமதி ச. அமிர்தாம்பிகை (ஆசிரியை கோப்பாய் ஆசிரிய பயிற்சிகலாசாலை), குகராஜா (கொழும்பு). தர்மராஜா [கொழும்பு] ஆகியோரின் அன்புக்குரிய மாமியாரும், பொன்னம்மா, சுப்பிரமணியம், சிவகடாட்சம், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 18-12-94 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கோம்பயன் மணல்மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம். (34232)

## துரையப்பா துரைராசா
(மகாவலி அபிவிருத்தித் திட்டம்)

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா துரைராசா 13-12-94 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற துரையப்பா தங்கம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் அப்புக்குட்டி - பூரணத்தின் அன்பு மருமகனும், தவமலரின் (பேபி) அன்புக் கணவரும், ராஜினி (கிறேஸ்ரன் கொம்பனி கொழும்பு), சுபாஜினி (ஆசிரியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), பாலினி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும், பிறேமகாந்தனின் (கொழும்பு - பீற்றாகாமென்ஸ் ஸ்தாபனத்தின் கணக்காய்வாளர்) அருமை மாமனாரும், அன்னலஷ்சுமி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அருமைச் சகோதரனும் மதியாபரணம் - நாகேஸ்வரியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

கந்தரோடை,
சுன்னாகம். (7837)

## செல்வி எஸ்தர் மாணிக்கம்பிள்ளை
[இளைப்பாறிய விடுதி மேற்பார்வையாளர் மோபிறே கல்லூரி, கண்டி]

சுண்டிக்குளியை வசிப்பிடமாகக் கொண்ட எஸ்தர் மாணிக்கம்பிள்ளை நேற்றுக் காலமானார். இவர் P. A. தம்பிராஜாவின் அருமைச் சகோதரியும், கிளாடிஸ் செல்வராணியின் அருமை மைத்துனியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (17-12-94) சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:
இரஞ்சனா தம்பிராஜா
[மருமகள்]

17/4 றெயில்வே ஒழுங்கை,
[சோமசுந்தரம் அவெனியூ அருகில்,
சுண்டிக்குளி. [34230]

## திருமதி தம்பிஐயா பொன்னம்மா

எழுதுமட்டுவாள் விழுப்பளையைச் சேர்ந்த, காலம் சென்ற தம்பிஐயாவின் மனைவி பொன்னம்மா நேற்றுக் காலமானார். இவர் தம்பிஐயாவின் அருமை மனைவியும், மாரியம்மா, சிவபாக்கியம் (கனடா), தங்கராசா, நடேசபிள்ளை, காலம் சென்ற சுந்தரலிங்கம், மற்றும் சிவராமலிங்கம், காலம் சென்ற இரத்தினம் ஆகியோரின் அருமைத் தாயாரும், தங்கம்மா காலம் சென்ற செல்லம்மா, கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று (17-12-94) பி.ப. 2.00 மணிக்கு விழுப்பளையில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார்' உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. T. சிவராமலிங்கம்
[மகன்]

[34233]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/.2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யாழ். றோட்டறிக் கழகம்

## தொழிற் திறமை விருது வழங்கல் பிற்போடப்பட்டுள்ளது

யாழ். இந்துக்கல்லூரியில் இன்று (17-12-1994) நடைபெறுவதாக இருந்த தொழிற்திறமை விருது வழங்கும் வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இவ் வைபவம் 24-12-1994 சனிக்கிழமை காலை 9மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் [சி-9843]

யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை]

## க. பொ. த. உயர்தரம் - 1997

மேற்படி வகுப்புகள் [எல்லாப் பிரிவுகளும்] ஆரம்பமாக உள்ளன. விண்ணப்பப் படிவங்களை கல்லூரிக் காரியாலயத்தில் பெற்று, பூர்த்திசெய்து 31-12-94 ற்கு முன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

அதிபர்

[சி/5756]

## இராமநாதன் நுண்கலைக் கழகக் கவின் கலை மன்றம்
நடத்தும்

## இசையரங்கு

| | |
|---|---|
| காலம்: | 17-12-94 சனி மாலை 3-00 மணி |
| இடம்: | கைலாசபதி கலையரங்கு |
| பாட்டு: | திரு. A K. கருணாகரன் |
| வயலின்: | திரு R. ராதாகிருஷ்ணன் |
| மிருதங்கம்: | திரு. M சிதம்பரநாதன் |
| கஞ்சிரா: | திரு. S. பாலச்சந்திரசர்மா |
| கடம்: | திரு. சதா வேல்மாறன் |

★ கலாரசிகர்களை அன்புடன் அழைக்கிறோம். ★

இங்ஙனம்;
— கவின்கலை மன்றம்.

(7836)


விசேட மலிவு விலை!

## திருமாட்டி
(புடைவைக் கடல்)
(சீமாட்டி)

நத்தார், புதுவருடப் பண்டிகைகளைச் சிறப்பிக்க பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட தரமான, புத்தம் புதிய புடைவைத் தினுசுகள் விசேட கழிவு விலையில் விற்பனையாகின்றன!

- ✶ யப்பான் சாறிகள்
- ✶ அமெரிக்கன் ஜோஜெட் சாறிகள்
- ✶ பூனம், பட்டர் ஃபிளை சாறிகள்
- ✶ சிபோன் சாறிகள்
- ✶ விஸ்கோஸ் துணிவகைகள்
- ✶ பாட்டிக் புறக்குகள்
- ✶ பிறின்டெட் - பிளேன் ரிசூ பலஸ் துணிகள்
- ✶ சித்தை, பப்பிளின்

மற்றும்
சூட்டிங் சேட்டிங், சேட், ரீசேட் வகைகள்
இன்னும் பலப்பல புடைவைத் தினுசுகளுக்கு

இன்றே நாடுங்கள்:

திருமாட்டி (புடைவைக் கடல்)
(சீமாட்டி)
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-13]


## விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அமரர் ஜெ.க. குமரையா ஞாபகார்த்தமாக அழைக்கப்பட்ட கழகங்களிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பின்வருமாறு:-

பிற்பகல் 2.45 — கலைவாணி வி.க எதிர் பாடுமீன் 'பி' அணி.

பிற்பகல் 4 மணி— சென். அன்ரனீஸ் வி.க எதிர் றோயல் வி.க. (ஜ-20)

★ ★ ★

வலிமேற்கு உதைபந்தாட்டச் சங்கம் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

பிற்பகல் 2. 30— யங் ஹென்றியன் அணி எதிர் யங் றோயல்.

பிற்பகல் 3.30— ஞானமுருகன் வி.க எதிர் விநாயகர் வி.க. (ஜ-20)

### சுவிஸ்..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தது.

வெளிநாட்டு நிதியை நாட்டுக்குள் கொண்டுவரவும் —

வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரவும் —

நாட்டில் புழக்கத்தில் இருந்த கறுப்புப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்யே வசதிஅளிக்கவுமே — சுவிஸ் வங்கி முறை அறிமுகப் படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் சுவிஸ் வங்கி முறை சர்வதேச கள்ளப் பணப் புழக்கத்துக்கும், போதைப் பொருள் கடத்தல் கும்பகல்ளின் கொடுக்கல் வாங்கல்களுக்கும் சாதகமாக அமைந்துள்ளது என்று நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ - 6)

### தமிழகத்தில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலுக்கட்டாயமாக தமிழக அரசு திருப்பி அனுப்புவதை நிறுத்த வேண்டும். அடிப்படை மனித உரிமைகள் அவர்களுக்கு கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்சு வேண்டும்.'' என்று அவர்கள் சமர்ப்பித்த மனுவில் கோரியுள்ளனர்.

தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் வேலூரில் உள்ள முகாமுக்கு ஆணைக்குழு உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டனர். (இ-3)

### ஓய்வூதியர்...
( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனவு வழங்கப்படுகிறது.

இந்த ஓய்வூதியக் கொடுப்பனவு இலங்கையில் யாழ். மாவட்டத்திலேயே முதல் முதலாக வழங்கப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. [அ-37]

### வருந்துகிறோம்

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் ''விருட்சம்'' சஞ்சிகை 92/93 இல் வெளியாகியிருந்தபூச்சிய அடிப்படைப் பாதீடு என்ற கட்டுரையினை எழுதியவர்

திரு. சு. சிவகுமரன்

என்பதே சரியானதாகும் இது முன்பு தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது.

வ. மு. மாணவர் மன்றம் 92/93

(34228)

### விடைத்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்த மாணவர் சீருடைத் துணியில் எஞ்சியவையும் 'ஹபரண' கப்பலில் எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

### சமாதான முயற்சி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் கூடிய கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-3)

ஒருநாள் ஒத்திவைப்பு

## போஸ்கோ
ஆதரவில்
யாழ். மிட்ரவுண் றோற்ரறக்ற் கழகம்
நடத்தும்
மின் ஒளியிலான

## கராட்டி இறுதிப் போட்டிகள்

✶ இன்று ஆரம்பிக்க இருந்த இறுதிப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒருநாள் ஒத்திப் போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இடம்: யாழ். பல்கலைக்கழக முன் மைதானம்
காலம்: மார்கழி 18ஆம், 19ஆம் திகதிகளில் (ஞாயிறு, திங்கள்)
மாலை 6.00 மணி — இரவு 11.00 மணி

அன்பளிப்பு: 20/- 50/- 100/-
சிறுவர்களுக்கு மட்டும் 10/-

✶ நேற்றைய தினம் பிரசுரமான விளம்பரச் சிக்கல்களுக்கு மனம்வருந்துகிறோம்.

தலைவர்
(சி/9848)

# மரண அறிவித்தல்கள்

## முருகர் சின்னத்தம்பி
(ஓய்வுபெற்ற உப அதிபர் நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலயம்]

காங்கேசன்துறையைச் சேர்ந்த முருகர் சின்னத்தம்பி 15-12-94 அன்று காலமானார்.

இவர் குணமணியின் அன்புக் கணவரும், அனுசுயா, சுகன்யா (நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (16-12-94) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் (பாப்பா)
அனுசுயா (மகள்)

தற்போதைய முகவரி:
கென்றி பாலசிங்கம்,
மயிலங்காடு,
சுன்னாகம். (7838)

## திருமதி நவரத்தினம் தங்கமுத்து
[நாகம்மா]

சரவணை கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட நவரத்தினம் தங்கமுத்து காலமாகிவிட்டார். அன்னார் நாகலிங்கம் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், நாகராசா, மகாலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேஸ்வரி, இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் செக்காலை லேன், மானிப்பாய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

தகவல்:
இ. செல்வநாயகம்
[மருமகன்]

செக்காலை லேன்,
மானிப்பாய் வடக்கு. [34234]

## திருமதி பொன்னம்மா குமாரகுலசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியை)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி. குமாரகுலசிங்கம் (சுகாதார விகிதர், அவர்களின் அன்பு மனைவியும், ஜெயக்குமாரி (ஜேர்மனி), தயாபரன் (கனடா), ஈஸ்வரன் (சுவிஸ்), கிருபாகரன், ஜெயகௌரி (புள்ளிவிவரவியல் திணைக்களம் கொழும்பு), பிரபாகரன் (யாழ். பல்கலைக்கழகம்), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தவடிவேலின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும், கிரிசாந்தின் (ஜேர்மனி), அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று'17-12-94) அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
கு. பிரபாகரன்
(மகன்)

''குமார் இல்லம்''
உடுவில் தெற்கு
சுன்னாகம். (34235)


நத்தார் புதுவருட நன் நாட்களை முன்னிட்டு

## விசேட கழிவு விற்பனையும் மலிவு விற்பனையும்

- ✶ புத்தம் புதிய புதிய ரகச் சாறி வகைகள்
- ★ சிறியோர் முதல் பெரியோர் வரையிலான புதிய ரக றெடிமேட் ஆடைகள்
- ✶ சூட்டிங் சேட்டிங் வகைகள்

மற்றும் புடைவை வகை அத்தனையும் விசேடமாக தருவிக்கப்பட்டு விற்பனையாகின்றன

உங்கள் தெரிவுகளுக்கான எமது மையங்கள்:

## யோகாமணி ஆடை அகம்
32 சந்தோஷம் தெரு,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யோகா ஆடை அகம்,
10, மேஜர் சோதியா தெரு,
(மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

குமார் புடைவை மாளிகை,
முத்திரைச் சந்தி,
(... முன்பாக)
நல்லூர்.

[சி-9846]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org